# தமிழ்மொழிஇறுதியாண்டுப் பொதுத்தேர்வு
# 2012
# End of Year Examination

**Reading Time: 15 minutes**
**Writing Time: 90 minutes**

பாடசாலை: …………………… வருடம்: 04

மாணவர் பெயர்: …………………. திகதி: 08 – 12 – 2012

**Directions to Students**

**Materials**

Question and Answer booklet of 6 pages.
Working space is provided throughout this booklet.

**The Task**

This examination of two sections.
Section A (Multiple Choice) and Section B (Short Answer)
Answer **all** question from Section A. Section A is worth **30 marks.**
Answer **all** questions from Section B. Section B is worth **70 marks**.
There are a total of 100 marks available.
The marks allocated to each part of each question appear at the end of each part.
Written responses should be in the language stated by the question.

The purpose of the exam is to assess your language skills and your knowledge in this language. Please answer all questions to the best of your ability and knowledge through what you have learnt at school and in general.

☐

இறுதியாண்டுத் தேர்வு **தமிழ் மொழி வகுப்பு 04** 08-12-2012

**பன்முகதேர்வு வினாக்கள்** **Section A** **வருடம்: 04**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | கண்ணிமை என்பது<br>1.கண் 2. கண் இமை 3. விழித்திரை 4. கண்மடல் | 1 | 2 | 3 | 4 |
| 2 | அவள் பாட்டுப் ------<br>1. பாடினான் 2. பாடுகிறார் 3.பாடுகிறான் 4. பாடினாள். | 1 | 2 | 3 | 4 |
| 3 | காகம் நிறம் கருமையானது. **கருமை** என்றால்<br>1. வெள்ளை 2. மஞ்சள் 3. சிவப்பு 4. கறுப்பு | 1 | 2 | 3 | 4 |
| 4 | மரம்-செடி சேர்க்க<br>1. மரசெடி 2. மரச்செடி 3. மரஞ்செடி 4.மரம்செடி | 1 | 2 | 3 | 4 |
| 5 | நாய் குரைக்கும். கிளி<br>1. கத்தும் 2. சீறும் 3. பேசும் 4. பிளிரும் | 1 | 2 | 3 | 4 |
| 6 | வணிகன் வண்டியில் ஏறி -----------<br>1. பேசினாள 2. நடந்தான் 3.அமர்ந்தான் 4. ஏறினான் | 1 | 2 | 3 | 4 |
| 7 | அன்பான ------------- ஆபத்தில் அறியலாம்.<br>1. தம்பியை 2. நண்பனை 3. ராமனை 4. தங்கையை | 1 | 2 | 3 | 4 |
| 8 | வெற்றி எதிர்ச்சொல்<br>1 தோல்வி 2. பகை 3. வேலை 4. நோய் | 1 | 2 | 3 | 4 |
| 9. | **road** என்பது<br>1. வீடு 2. மாளிகை 3. பாடசாலை 4. வீதி | 1 | 2 | 3 | 4 |
| 10. | ஆயிரத்துப்பதினைந்து என்பதை எண்களில் எழுதினால்<br>1. 1005 2. 15 3. 105 4. 1015 | 1 | 2 | 3 | 4 |

□



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11. | ஆற்றுநீர் ---- என ஓடியது<br>1. சலசல 2. படபட 3. மளமள 4. குடுகுடு | 1 | 2 | 3 | 4 |
| 12. | சேவல் காலையில்<br>1. கத்தும் 2. கூவும் 3. பேசும் 4. பாடும் | 1 | 2 | 3 | 4 |
| 13. | பொய்மை இதன் எதிர்ச்சொல்<br>1. துன்பம் 2. சந்தோசம் 3. துக்கம் 4. உண்மை | 1 | 2 | 3 | 4 |
| 14. | அவர் பாட்டுப்<br>1. பாடினார் 2. பாடினார்கள் 3.பாடியது 4. பாடினான் | 1 | 2 | 3 | 4 |
| 15 | நாங்கள் நேற்று பாடசாலைக்கு<br>1. வந்தோம் 2. வருகிறோம் 3. வந்தேன் 4. வருவேன் | 1 | 2 | 3 | 4 |
| 16 | தாயைக் கண்ட குழந்தை போல என்றால்<br>1. உறக்கம் 2. மகிழ்ச்சி 3. துக்கம் 4. அழுகை | 1 | 2 | 3 | 4 |
| 17. | மதம் என்பது.<br>1.language 2. city 3. religion 4. sand | 1 | 2 | 3 | 4 |
| 18. | பசுவின் குட்டியை அழைப்பது<br>1.குஞ்சு 2. பிள்ளை 3. குட்டி 4. கன்று | 1 | 2 | 3 | 4 |
| 19. | பொருத்தமற்ற சொல்<br>1. சாலை 2. வீதி 3. மாணவி 4. தெரு | 1 | 2 | 3 | 4 |
| 20. | ஓவியன் படத்தை<br>1.எழுதினான் 2. வரைந்தான் 3. போட்டான்<br>4. செதுக்கினான் | 1 | 2 | 3 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21 | Library என்பது --------------<br>1. வீடு 2. கோயில் 3. வீதி 4. நூலகம் | 1 | 2 | 3 | 4 |
| 22 | அவர் தன் மகனுடன் -------------- சென்றார்<br>1. வீட்டில் , 2. வீட்டை, 3. வீட்டுக்குச் 4. வீட்டின் | 1 | 2 | 3 | 4 |
| 23 | அரவம் என்பது<br>1. தவளை 2. பாம்பு 3. முயல் 4. கிளி | 1 | 2 | 3 | 4 |
| 24 | பற்பல பிரித்து எழுதினால் வருவது<br>1..பல+ பல 2. பற் + பல 3. பல் + பல 4. பப்+ பல | 1 | 2 | 3 | 4 |
| 25 | மார்கழி என்பது<br>1.பொருட்பெயர் 2. காலப்பெயர் 3. தொழிற்பெயர்<br>4. இடப்பெயர் | 1 | 2 | 3 | 4 |
| 26 | பள்ளிக்கூடம் என்பது<br>1. வீடு 2. இல்லம் 3. மனை 4. பாடசாலை | 1 | 2 | 3 | 4 |
| 27 | கோபத்தில் அவன் -------------- சிவந்தன.<br>1. விழிகள் 2. கால்கள் 3 கைகள் 4. பற்கள் | 1 | 2 | 3 | 4 |
| 28 | நாயன்மாரில் ஒருவர்<br>1. கம்பர் 2. பாரதியார் 3. இளங்கோ 4.திருஞான சம்பந்தர் | 1 | 2 | 3 | 4 |
| 29 | ராமன் நூலகத்துக்குப் ------------------ போனான்.<br>1. படிக்கப் 2. பறிக்கப் 3. விளையாடப் 4. பாடப் | 1 | 2 | 3 | 4 |
| 30 | பொருத்தமற்ற சொல் எது<br>1.மங்கை 2. பெண் 3. மடந்தை 4. கிழவன் | 1 | 2 | 3 | 4 |

(மொத்தம் 30 புள்ளிகள்)

☐

**தமிழ் மொழி**

இறுதியாண்டுத் தேர்வு **வகுப்பு 04** 08-12-2012

**வினாக்கள்;** **வருடம்: 04**

1.**பின்வரும் பந்தியை வாசித்து, கேள்விகளுக்குப் பதில் எழுதுக.**

ஒரு பூஞ்சோலையில் குயில் ஒன்று இன்னிசை பரப்பிக் கொண்டிருந்தது. அதனை ஒரு மயில் கேட்டது குயிலில் இசை மயிலின் மனதைக் கவர்ந்தது. குயிலின் மீது பொறாமை கொண்டது. தனிமையில் கவலையுடன் அமர்ந்திருந்தது. அதனைக்கண்ட மற்ற மயில்கள் ஏன் கவலையடன் இருக்கிறாய் என்று கேட்டது. அதற்கு அந்த மயில் அந்த குருவியைப் போல் தானும் அழகாக பாடவேண்டும் என்றது. அதனைக்கேட்ட மற்ற மயில்கள் சிரித்தன. அவை மயிலே! நீ மற்ற பறவைகளை விட அழகாக இருக்கிறாய். உன் கழுத்தில் மணியொளி நிலவுகிறது. உன்தோகை இறகுகளில் எத்தனையோ வண்ணங்கள் உண்டு என்றன. அதற்கு அந்த மயில் இந்த அழகை விட எனக்கு பாட நல்ல குரல் தான் வேண்டும் என்றது. அதற்கு அவை வருந்தாதே மயிலே! ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திறமை உண்டு. இருப்பதைக் கொண்டு இன்பமாக வாழ வேண்டும். இல்லாததற்கு ஏங்காமல் போதுமென்ற மனமே வேண்டும் என அறிவுரை கூறின.

1. மயில் ஏன் குயிலைப் பார்த்து பொறாமைப்பட்டது?

_______________________________________________

2. மயிலின் சிறப்பு என்ன?

_______________________________________________

3. குயிலின் சிறப்பு என்ன?

_______________________________________________

4. மயிலின் தோகையில் இறகுகளின் பெருமை என்ன ?

_______________________________________________

5. கதை கூறும் நீதி என்ன?

_______________________________________________

**(10 புள்ளிகள்)**

**2. பன்மையாக்கி வசனத்தை மாற்றி எழுதுக.**

**அவன்** மைதானத்தில் ஓடி **விளையாடினான்.**

_______________________________________________

ராணி மரத்தில் **பூ பறித்தாள்.**

_______________________________________________

**சிறுவன்** சாலையில் நடந்து **சென்றான்**

_______________________________________________

**அவள்** நாட்டியம் **பயின்றாள்.**

_______________________________________________

தோட்டத்தில் **மாடு** புல் **மேய்ந்தது**.

_______________________________________________

**நாய் வாலை ஆட்டியது**.

_______________________________________________

**(10 புள்ளிகள்)**

**3. சரியான சொல்லின் கீழ் கீறிடுக.**

நாய்கள் திருடனை பார்த்துக் (குரைத்தன, குரைத்தது)

மீன்கள் நீரில் (வாழும், வாழுகின்றன)

மாம்பழம் இனிய சுவை (உடையன, உடையது)

என் கைத்தொலைபேசியில் நான் (பேசுகிறேன், பேசுகிறார்கள்).

குயவன் பானையை (வனைந்தார்கள், வனைந்தான்).

**(10 புள்ளிகள்)**

☐



4.**பின்வரும் சொற்களைக் கருத்தமைய ஒழுங்கு செய்து எழுதுக**.

செடி – வருகிறது – விதையிலிருந்து – முளைத்து

______________________________________________

தோலும் - உள்ளன – ஓடும் - விதையின் - பாதுகாப்புக்கு

______________________________________________

இருக்கும் - நீண்டகாலம் - உயிருடன் - உள்ளே – விதை

______________________________________________

செடியாக – வளரும் - உதவியுடன் - நிலம், நீர் காற்று – விதை

______________________________________________

வளர்க்கின்றன - செடி - இனத்தை – தன் – இப்படியாக

______________________________________________

**(10 புள்ளிகள்)**

**5. சேர்த்தெழுதுக.** **பிரித்தெழுதுக.**

| | |
|---|---|
| தீ – சட்டி ________________ | வெண்புறா -________________ |
| காலை – கதிர் ________________ | பூச்சரம் - ________________ |
| பனி – துளி ________________ | புத்தாடை - ________________ |
| சாலை – ஓரம் - ________________ | கைப்பை - ________________ |
| கண் - இமை - ________________ | வகுப்பறை – ________________ |

**(10 புள்ளிகள்)**

**6. ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க.**

கவிதாவுக்கு நேற்று பிறந்த நாள். அவளுக்கு ஒன்பது வயது.
கவிதா தன் பிறந்தநாளுக்கு எங்களை வரச் சொல்லி அழைத்தாள்.
நானும் மற்றைய நான்கு நண்பர்களும் பிறந்தநாள் விழாவுக்குப் போனோம்.
வேறுபல நண்பர்களும் வந்திருந்தார்கள். வீடு நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. கவிதா அழகான ஆடை அணிந்திருந்தாள்.
அவள் தன் பிறந்தநாள் கேக் வெட்டினாள்.
நாங்கள் பிறந்தநாள் பாட்டுப் பாடினோம்.
அதன்பின் எல்லோருக்கும் சிற்றுண்டிகள் வழங்கினாள்.
குளிர்பானங்கள் அருந்தினோம்.
பின் பலவகை விளையாட்டுக்கள் விளையாடினோம்.
கொண்டுசென்ற பரிசுகளை அவளுக்குக் கொடுத்தோம்.
பின் வீடு திரும்பினோம்.

____________________________________________________________________________

**(10 புள்ளிகள்)**

☐



**7. மெல்பேர்ண் கப் குதிரைப்பந்தயம் அல்லது தீபாவளி பற்றி 10 வசனங்கள் எழுதுக.**

**(10 புள்ளிகள்)**